**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 2.ஶ்ரீலாடுபாவா ஸ்வாமிகள் [வட தேசத்து வள்ளலார்]**

---

இன்று நவநாகரீக உலகில் மக்கள் ஒரு புறம் மருத்துவ விஞ்ஞான அறிவியல் முன்னேற்றம் எனப் பல விஷயங்களில் முன்னேறும் அதே வேலையில் சற்றும் விழிப்புணர்வு இல்லாமல் அதிகமாக அசைவ உணவில் ப்ரியம் கொள்கிறார்கள்.

அசைவம் உண்பதை ஏன் வேண்டாம் என்று அறிவியல் நோக்கில் காண்க.Red meat உடலுக்கு ‘நல்லது அல்ல. ஆனால் அது தான் கிடைக்கும் என்றால் வேறு வழியில்லை.முன்பெல்லாம் தமிழகத்தில் வாரம் ஒரு முறை ஞாயிறு அன்று மக்கள் அவைச உணவு செய்வர்.ஆனால் இன்று இளைஞர்களுக்கு நாள் திதி எல்லாம் இல்லை.

இன்னும் சொல்லப் போனால், மிக உயர்ந்த ஆச்சாரக் கொள்கைகளை உடைய குடும்பங்களில் அசைவம் சாப்பிடுவதை வழக்கம் ஆக்கிக் கொண்டு வருவதையும் காண்கிறோம்.வெளிநாடுகளில் வாழும் நம்மூர் மக்கள் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் உணவு விஷயத்தில் இருப்பதையும் காண்கிறோம்.அதே மேலை பூமியில் தான் அக்கால காந்தியும் இன்னும் இக்கால சில கட்டுக்கோப்புள்ள இந்தியர்களும் வாழ்கிறார்கள். அமெரிக்கா சென்று முற்றிலும் சைவமாக மாறிய அன்பர்களும் உண்டு.

ஒரு காலத்தில் வழிபாடுகளில் விலங்குகள் பலி தரப்பட்டன.அதை மாற்றினார்கள் பெரியோர்கள்.ஆட்டைப் பலி தருவது என்றால் ஆடு போன்ற மூடத்தனத்தைப் பலி தருவது எனப் பொருள்.அதே போல் எருமையைப் பலி தருவது எனில், நமது திமிரை, விடாப்பிடித் தன்மையை விட்டு விடுதலே ஆகும்.நரபலி தருவது என்பது மீண்டும் மனித ஜென்மத்தின் ஆசையை விடுதலாம்.இப்படிப் பொருள் கொண்ட வேத வழிபாடாகப் பின்னர் மாறியது நம் சடங்குகள்.

மிகத் தொன்மையான முருகன் வழிபாட்டில் ஆட்டைப் பலி கொடுத்த உண்மை இலக்கியங்களில் உள்ளன.பின்னர் நாம் முருக வழிபாட்டை மாற்றிக் கொண்டு விட்டோம் அல்லவா?

ஆனால் நாக்கைக் கட்டுப்படுத்த முடியாத மனிதக் கூட்டம், இறைவன் பேரில் பல விதமான பலிகளைக் கோயில்களில் தருவதை இன்றும் காண்கிறோம்.குறிப்பாக தேவி உபாசனையில் இப்பலி மிகவும் முன் நிற்கின்றது.நமக்கு மாற்றிக் கொள்ள முடியாத, மாற்றப் பிடிக்காத கொள்கைகளுக்கு அறிவியல் விளக்கம் தர

முயல்வதில்லை.மூட நம்பிக்கைகளை ஒதுக்க அறிவியலின் துணையை நாடும் அன்பர்கள் ஏன் அசைவத்தை ஒதுக்க அறிவியலைக் கைக்கொள்வது இல்லை?

இன்று மிகச் சமீபகாலத்தில் தமிழகத்தில் குழந்தைகள் அசைவ உணவைச் சிற்றுண்டிகளாகச் சாப்பிடும் அளவுக்கு ஆசையில் மூழ்கும் போக்கைக் காண்கிறோம்.

அசைவ உணவை விருந்தினருக்கு அளிப்பது தான் மிகவும் உயர்ந்த விருந்து என்ற மிகத் தவறான நம்பிக்கை கிராமத்துப் பாமரன் முதல் IT இளைஞன் வரை உள்ளது.அசைவ உணவை உண்பது பசிக்கு என்ற நிலை மாறி, சிற்றுண்டியாக உண்ணும் நிலைக்குச் சமூஹம் மாறி வருகிறது.

அதற்காக எண்ணற்ற விலங்குகளும் பறவைகளும் உருவாக்கப்படும் அவலம் சொல்லி மாளாது.அதிலும் கோயில்களில் நிகழும் பலிகள் அருவருப்பையே உண்டாக்குவன.பன்றியைக் கொல்வது, அதன் பாகங்களை அப்படியே உண்பது, போன்ற பல பயங்கரமான காட்டுத்தனமான வழக்கங்கள் நம்மிடையே இன்றும் மாறாமல் உள்ளன.

நாம் வெளித்தோற்றத்தால் மாறி உள்ளோம்.உள்ளே இன்னும் மாறவே இல்லை.
ஏசு நாதர் மீன்கள் கிடைக்காமல் பசியால் வாடிய அன்பர்களுக்கு மீன் பிடிக்க வழிகாட்டி, அதைச் சுட்டும் பசியாற்றினார்.பசிக்காக அவர்கள் மீன் உண்டனர்.

அதிபத்த நாயனார் மீனவர் தான்! அவருக்கு முக்தி கிடைத்தது.

**தமிழகத்தில் மீண்டும் வள்ளலார் தோன்றிடும் காலம் வர வேண்டும் என இறைவனை ஜீவன்கள் வேண்டுகின்றன.மீண்டும் ஸ்ரீக்ருபானந்த வாரியார் வர வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறோம்!**

**"வள்ளலாரின் முகத்தைப் பார்த்தே அசைவ உணவை விட்டவர்கள் பலர்"** என்று ஒரு அன்பர் கூறியதை இவ்விடத்தில் நினைவு கொள்கிறோம்.

ஒரு சிறு எறும்பை அடித்துக் கொன்ற காரணத்தால் ஒரு நாள் முழுவதும் விருந்தினர் வீட்டில் ஸ்ரீமத்.பாம்பன் ஸ்வாமிகள் பட்டினி இருந்தாராம்.

மாறுவது தானே பரிணாமம்?
**இந்து மதத்தில் பல மூடப் பழக்க வழக்கங்கள் உள்ளன என்று அவற்றைச்**

**சீர்திருத்தம் செய்த நாம் ஏன் இன்னும் பலிகளைச் சீர்திருத்தம் செய்யவில்லை?காரணம் நம் நாக்கே!**
நல்ல விஷயங்களில் அம்மாற்றம் இருக்க வேண்டும்.
**ஸ்ரீராமனே மாமிசம் உண்டான் என்று வாதாடும் மக்கள், ஏன் அவனை விட நாம் முன்னேற மறுக்கிறோம்?**
**அதே இராமன் சமூஹ நலனுக்காக மனைவியைத் துறந்தான்.அதைச் செய்யுங்களேன்!**
**அசைவ உணவை விட்டு, அவனை விட உயருங்கள்!**

அதே வேளையில் அஹோரிகளின் தன்மையையையும் காண வேண்டும்.அதற்கு எங்கள் uni5 பெரியபுராணப் பகுதியில் அஹோரிகள் பற்றி, சிறுத்தொண்டர் புராணத்தைக் காண்க.ஆனால் அதே அஹோரிகள் உபாசனை அல்லாமல் வெறும் வெறியில் செயல்படும் நிகழ்வுகளை you tubeல் காண்கிறோம்.இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்று வீதிதோறும் மாமிச உணவகங்கள் பெருகி வரும் நிலையைக் காண்கிறோம்.மாமிசம் சாப்பிடுவது வீரத்தைத் தராது.மாமிசத்தை ஒதுக்குவதே வ்ரதம், வீரம்! ஆயிரம் பெயர்களின் விதவிதமான அசைவ உணவகங்கள் வந்துள்ளன.பசிக்குச் சாப்பிடும் நிலை போய் ருசிக்குச் சாப்பிடும் தன்மைக்குப் பலர் மாறி உள்ளனர்.

**<u>கண்டிக்கிறோம்!</u>**
இதில் சமூஹத்தில் மிகவும் உயர்ந்த சாதியினர் இன்று அதிகம் அசைவம் உண்பதையும் காண்கிறோம்."பண்பாடு-நாகரிகம்-ஆச்சாரம்-ஆன்மீகம்" என்று மார்தட்டும் அவர்களில் பலர் தான் முதலில் அவற்றை மீறுகிறார்கள்.இதைச் சொல்ல பயப்படுவதில்லை.பின்னர் அவர்கள் அதை வழக்கம் ஆக்கிக் கொள்கின்றனர்.ஆனால் அதைப் பிறர் செய்யும் போது அவர்களைக் கண்டிக்கிறார்கள்.சென்னையில் அசைவம் சாப்பிடும் மக்களுக்கு வீடு தராத பலர் உணவகத்தில் சென்று அசைவம் சாப்பிடுவதைக் காண்கிறோம்!

இதன் பலன் தான் இன்று நாம் அனுபவிக்கும் வித விதமான வ்யாதிகள்!
விலங்குகளின் மனதில் ஏற்படும் பயம், இன்று உலகை பாதித்து வருகின்றது.
அதனால் பூமியில் negative அதிர்வலைகள் ஏற்படுகின்றன.
மனிதனுக்குள் இருக்கும் மிருகத்தனம் இன்னும் மாறவில்லை.
அசைவ உணவை விட்டு சைவம் ஆகுங்கள் என்று கூறவில்லை.அசைவ உணவைக் atleast குறைத்துக் கொள்க என்கிறோம்.விலங்குகளின் நிலையில்

உங்கள் குழந்தைகளை வைத்துக் காண்க!

**<u>வன விலங்கு மட்டும் அசைவம் உண்ணலாமா?</u>**

வன விலங்குகள் பசிக்காக மட்டும் அசைவம் உண்பன.மனிதன் ருசிக்காக விலங்குகளைப் படைத்து அதைக் கொன்று உண்கிறான்.இறைவனின் பெயரில் அட்டூழியம்! அது எந்த மதமாக இருப்பினும் தவறே!ஆதி சங்கரர் அவதரித்த கேரள பூமியில் அசைவ உணவின் போக்கு இன்னும் மிக மோசம்! தாந்த்ரீகத்தில் மதுவையும் மாதையும் மாமிசத்தையும் கவனமாகக் கையாண்டனர்.ஆனால் அப்பக்குவம் அனைவருக்கும் சரியாக வராது என்று ஒதுக்கினார்கள் தமிழர்கள்.

வட தேசத்தில் தாந்த்ரீக வழிபாட்டில் இன்னும் மாமிசம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது.பலிகள் பல நிகழ்கின்றன.கொல்கத்தா, காமாக்யா போன்ற சக்தி ஸ்தலங்களில் பலிகள் இன்னும் நிகழ்கின்றன.

**<u>வட பாரதத்தின் வள்ளலார்</u>**

சுமார் 500 வருடங்களுக்கு முன் மக்களுக்கு அஹிம்சா மர்கத்தை எடுத்துக் கூறி மக்களின் பலிக் கொள்கைக்கு மாற்றுக் காண அவதாரம் செய்தவர் தான் ஸ்ரீலாடு பாவா.அவரை "**வட தேசத்தின் வள்ளலார்**" என்றே கூற முடியும்.

**மஹாராஷ்ட்ரத்தில் ஜோதிஷ்பூரில் பிறந்த நல்மனிதர் இவர்.**

அனைத்து உயிர்களிலும் நானே ப்ரஹ்மமாக இருக்கிறேன் என்று கீதையில் கண்ணன் கூறிய உண்மையை ஆன்மீக சாதனைகளால் உணர்ந்தவர் பாவா.வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர்.குறிப்பாக பலி தரப்படும் இடங்களுக்குச் சென்று மக்களுக்கு அஹிம்சா மார்கத்தை எடுத்துக் கூறிப் பலரை சைவத்துக்கு மாற்றினார் இவர்.இதனால் இவர் அன்று சந்தித்த challenges அனேகம் அனேகம்! மிரட்டல், அடி உதை, கொலை பயம் என எதையும் அவர் சந்தித்தார்.காரணம் தன்னுள் இருந்து தன் பணியைச் செய்பவன் தன் இஷ்ட மூர்த்தியாகிய விட்டலனே என்று உணர்ந்தார்.விட்டலன் அவரை விடுவானோ?

ஒரு சமயம் ஒரு காளி கோயிலின் நிகழ இருந்த பெரும் பலிகளைத் தடுக்க வழக்கம் போல் லாடு பாவா சென்ற போது, சிலர் அவரையே பலி தர முடிவு செய்து அவரைக் கட்டிப்போட்டு விட்டனர்.அஹோர பூஜை செய்யுமவர்கள் அவரையே பலி தர முடிவு செய்தனர்.இதை வேறு பலரும் மறை முகமாக ஏற்றுக் கொண்டனர்.

நடப்பது நடக்கட்டும், வினைப் பயன் அவர்களைச் சாறும் என்று எடுத்துக் கூறிய

பாவா அமைதியாக க்ருஷ்ண சஹோதரியான தேவியை ஸ்மரணம் செய்தார்.அப்பாவி விலங்குகள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தியற்றவை என்று எண்ண வேண்டாம், அவை தன் உயிரை ஈந்து நமக்கு மிக மோசமான வினைப்பலனை உண்டாக்கும் என்பதை எடுத்துக் கூறி தேவி தத்வத்தையும் அன்னை வழிபாட்டின் உயர்ந்த தன்மையையும் விளக்கினார்.அப்போது அவரது மந்த்ர பலனால் அன்னை மூலஸ்தானத்தில் பலர் காண ப்ரத்யக்ஷம் செய்தாள்.அதைப் பலரும் உணர்ந்தனர்.அவரை விடுவித்தனர்.

பாவாவின் அஹிம்சையால் தேவியை உணரும் பேற்றினைப் பெற்ற அவ்வூர் ஜனங்கள் அஹோரிகளை விரட்டினர்.பலி செய்வதை நிறுத்தும் சத்யத்தை பாவா முன் செய்தனர்.அன்று இரவு அவ்வூர்த் தலைவர் கனவிலும் அன்னை வெளிப்பட்டுத் தன் கோயிலின் பலி தருவதைத் தடுக்க உத்தரவு செய்யும் படி ஆணை இட்டாள்.

**சமூஹத்தில் எந்த ஒரு நல்ல மாற்றத்தைச் செய்ய நாம் உழைத்தாலும் அது ஈசனுக்குச் செய்யும் பூஜையே!இப்படிப் பல கைங்கர்யங்கள் செய்ய முடியும்.சதா அவற்றைச் செய்யும் போது இஷ்ட மூர்த்தியை த்யானம் செய்க.**

விலங்குகள் தாங்கள் கொல்லப்படுவதைத் தடுத்த நிலையில் மனம் மகிழும் அல்லவா? அது லட்டு போல அவற்றிற்கு இனிக்குமாம்.இதை எடுத்துக் கூறி அவர் லாடு பாவா ஆனார் எனலாம்.

ஹரி ஓம்!